# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடமாகாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை

கர்நாடக சங்கீதம் | தரம் 11 | நேரம்:- 03 மணித்.

### பகுதி I

1. நாயகன்,நாயகி பாவமாக அமைந்த உருப்படிஎது?

1)தில்லானா 2)கீர்த்தனை 3)பதம் 4)இலட்சணகீதம்

2. அப்பியாசகானம் சபாகானம் இரண்டிற்கும் பொதுவானஉருப்படி?

1)இராகமாலிகை 2)சௌக்காலக்ருதி 3)வர்ணம் 4)கிருதி

3. உடுக்கு,விற்கடம் எனும் இசைக்கருவிகள் பயன்படுத்தக்கூடிய இசைநிகழ்வு.

1)நாடகம் 2)இசைக்கச்சேரி 3)வில்லுப்பாட்டு 4)இசைநாடகம்

4. கண்ட ஜாதி அட தாளத்தின் மொத்த அட்சரம்

1)18 2)29 3)14 4)08

5. மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம்

1)கல்யாணி 2)ஹரஹரப்ரியா 3)தோடி 4)ஹரிஹாம்போதி

6. சங்கராபரண இராகத்தின் பண்.

1)தக்கேசி 2)செவ்வழி 3)பழம்பஞ்சுரம் 4)பழந்தக்கராகம்

7. திருவிசைப்பா பாடப்படும் இராகம்.

1)கல்யாணி 2)மோகனம் 3)மத்யமாவதி 4)ஆனந்தபைரவி

8. தாய் இராகங்களிலிருந்து பிறந்த இராகம்.

1)ஜனகராகம் 2)ஜன்னியராகம் 3)உபாங்கராகம் 4)வக்ரராகம்

9. அன்னிய ஸ்வரக் குறியீடு

1)// 2) u 3)* 4)O

The National e-learning Portal for The General Education

10. தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும் இராகம்

1)வக்ரராகம் 2)வர்ஜராகம் 3)உபாங்கராகம் 4)பாஷாங்கராகம்

11. ஆரோகணம் அவரோகணத்தில் ஸ்வரங்கள் வரிசைக்கிரமமின்றி திரிந்துவரும் இராகம்.

1)வர்ஜ ராகம் 2)வக்ரராகம் 3)பாஷாங்கம் 4)உபாங்கம்

12. பஞ்சமாந்திய இராகத்திற்கு உதாரணம்

1)நாதநாமக்ரியை 2)நவரோஜ் 3)குறிஞ்சி 4)மகதி

13. எல்லா ஸ்வரங்களும் கோமளமாக ஒலிக்கும் இராகம்

1)கல்யாணி 2)மோகனம் 3)தோடி 4)ஹரஹரப்ரியா

14. இந்தியாவின் தேசிய வாத்தியம்

1)வீணை 2)புல்லாங்குழல் 3)மிருதங்கம் 4)தவில்

15. வீணை வாத்தியத்தில் சிறப்புற வாசிக்க கூடிய உருப்படிவகை

1)கீர்த்தனை 2)தில்லானா 3)தானம் 4)பல்லவி

16. பல்லவராட்சிக் காலப்பகுதி

1)14ம்,15ம்நூற்றாண்டு 2)7ம்,8ம்நூற்றாண்டு 3)17ம்,18ம்நூற்றாண்டு 4)19ம்,20ம்நூற்றாண்டு

17. முத்துத்தாண்டவர் முதன்முதலில் பாடியபாடல்

1)தரிசனம் செய்வேனே 2)காணாமல் வீணிலே

3)பூலோககைலாசகிரி 4)அருமருந் தொருதனிமருந்து

18. பொதுப் பண்களாவன

1)புறநீர்மை,பஞ்சமம் 2)தக்கேசி, ஸாதாரி

3)செந்துருத்தி,செவ்வழி 4)சீகாமரம்,கொல்லி

19. சங்கராபரணத்தின் நேர்பிரதிமத்திம இராகம்.

1)ஸிம்கேந்திரமத்திமம் 2)சண்முகப்ரியா

3)கல்யாணி 4)பந்துவராளி

The National e-Learning Portal for The General Education

20. T.R.மகாலிங்கம், ரமணி, T.R.நவனீதம் போன்றோர் வாசித்துப் புகழடைந்த வாத்தியம்

1)வீணை 2)தவில் 3)நாதஸ்வரம் 4)புல்லாங்குழல்

21. எல்லா அங்கங்களுக்கும் சாகித்யம் காணப்படும் உருப்படி.

1)தானவர்ணம் 2)ஜதிஸ்வரம் 3)பதவர்ணம் 4)இராகமாலிகைவர்ணம்

22. “சங்கீத ஸீதாகரம்” என்ற நூலை எழுதியவரும் காலப்பகுதியும்

1)15ம் நூற்றாண்டு–வெங்கடமகி 2)14ம் நூற்றாண்டு - ஹரிபாலர்

3)18ம் நூற்றாண்டு–கோவிந்தாச்சாரியார் 4)7ம்நூற்றாண்டு - தாளப்பாக்கம் சின்னையா

23. ஞானச்சிந்து, ஞானக்கும்பி, நலங்கு, ஊஞ்சல், லாலி முதலிய பாடல்களை இயற்றிய வாக்கேயகாரர்.

1)தியாகராஜர் 2)புரந்தரதாசர்

3)அருணாசலகவிராயர் 4)கோபாலகிருஸ்ணபாரதி

24. “மல்லாரி” இசைசிறப்புற இசைக்கப்படும் வாத்தியம்.

1)வயலின் 2)புல்லாங்குழல் 3)நாதஸ்வரம் 4)வீணை

25. ஹிந்துஸ்தானி இசையில் இசைக்கப்படும் பிரதான தாள வாத்தியம்.

1)மிருதங்கம் 2)டோலக் 3)தபேலா 4)தவில்

26. பின்னணி இசை,உடை,ஒப்பனை,பக்கவாத்தியங்கள் என்பவற்றை பிரதானமாக மேடையேற்ற வேண்டிய நிகழ்வு.

1)தனிஇசை 2)குழுஇசை 3)இசைநாடகம் 4)பண்ணிசை

27. தாளம் தொடங்கியபின் பாட்டுஆரம்பித்தல்.

1)அதீதஎடுப்பு 2)கர்ஹம் 3)அனாகதஎடுப்பு 4)சமஎடுப்பு

28. அபகாரநிந்தை என்னும் உருப்படிவகை.

1)தேவாரம் 2)திருப்புகழ் 3)கீதம் 4)கீர்த்தனை

29. மிஸ்ரசாபு தாளத்திற்குரிய சொற்கட்டு.

1)தகதிமி 2)தகிட 3)தகதகிட 4)தகிடதகதிமி

The National e-Learning Portal for The General Education

30. ஸரிகம குறிக்கும் காலம்.

1)1ம காலம் 2)2ம காலம் 3)3ம காலம் 4)விளம்பகாலம்

31. ஸ ரி க ம என்பது குறிக்கும் ஸ்தாயி.

1)மந்தரஸ்தாயி 2)தாரஸ்தாயி 3)அதிதாரஸ்தாயி 4)முத்தியஸ்தாயி

32. விவாதி ஸ்வரங்களின் எண்ணிக்கை.

1)36 2)72 3)4 4)40

33. பாணசக்கரத்தின் நான்காவது இராகம்.

1)சங்கராபரணம் 2)கரிஹாம்போதி 3)கரகரப்ரியா 4)மாயாமாளவகௌளை

34. காமவர்த்தனி என அழைக்கப்படுவது.

1)மாயாமாளவகௌளை 2)கல்யாணி

3)பந்துவராளி 4)கரகரப்ரியா

35. கரிகாம்போதி இராகத்திற்குரிய பண்கள்.

1)செம்பாழை,குறிஞ்சி 2)செவ்வழி,செந்துருத்தி

3)தக்கேசி,நட்டராகம் 4)பஞ்சமம்,பழம்பஞ்சுரம்

36. கர்நாடக இசைக்கு வயலினை அறிமுகப்படுத்தியவர்.

1)ஸ்டாடிவேடியஸ் 2)பாலுஸ்சுவாமிதீக்ஷிதர்

3)குன்னக்குடிவைத்தியநாதர் 4)லால்குடி ஜெயராமன்

37. மிருதங்கக் கட்டையின் மேற்பாக நடுவலயத்தின் பெயர்.

1)வலந்தலை 2)இடந்தலை 3)கரணை 4)அரடா

38. தசவித கமகங்களை வெளிப்படுத்தும் “விரிபோணி”என்ற வர்ணத்தை இயற்றியவர்.

1)திரிகூட இராசப்பகவிராயர் 2)சியாமாசாஸ்திரிகள்

3)பச்சிமிரியம் ஆதியப்பய்யர் 4)கணம் கிருஸ்ணய்யர்

39. “ஸ்வரமேளகலாநிதி”என்ற நூலை எழுதியவர்.

1)கோவிந்தாச்சாரியார் 2)சேத்ரக்ஞர் 3)வெங்கடமகி 4)இராமகமத்தய்யர்

40. விலோமசாபு தாளத்தில் உருப்படிகளை இயற்றியவர்.

1)தியாகராஜர் 2)புரந்தரதாஸர 3)சியாமாசாஸ்திரிகள் 4)முத்துஸ்வாமிதீக்ஷிதர்

The National e-learning Portal for the General Education

## பகுதிII

முதலாம் வினாவிற்கும் ஏனைய வினாக்களுக்குள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் **5** வினாக்களுக்கு விடை தருக.

I. 1) பந்துவராளி இராகத்திற்குரிய பண்கள் இரண்டினையும் எழுதுக. 2 புள்ளிகள்

2) சுருதியின் அடிப்படையைக் கொண்டு மிருதங்கத்தின் இரு பிரிவுகளும் எவை? 2புள்ளிகள்

3) ஹிந்துஸ்தானி இசையில் "காமாஜ்தாட்"என அழைக்கப்படும் இராகம் எது? 1 புள்ளி

4) அக்னிகோ என அழைக்கப்படும் இராகம் எது? 1 புள்ளி

5) சந்தங்களை பிரதானமாகக் கொண்ட உருப்படி எது? 1 புள்ளி

6) ஸர்ப்பிணி என்றால் என்ன? 1 புள்ளி

7) ஆதி தாளத்தின் மறுபெயர் யாது? 1 புள்ளி

8) 72 மேளகர்த்தாக்களை முதன்முதலில் உருவாக்கியவர் யார்? 1 புள்ளி

9)"பேரின்பபதங்கள்"என சிறப்பித்துக் கூறப்படும் உருப்படிவகையை இயற்றிய வாக்கேயகாரர் யார்? 1 புள்ளி

10) தற்போது வழக்கிலுள்ள பண்களின் எண்ணிக்கை யாது? 1 புள்ளி

II. பின்வரும் இராகங்களைக் கண்டுபிடித்தெழுதி அவற்றில் விரும்பிய ஒரு இராகத்திற்கு இலட்சணம் எழுதுக?

1) பண் சாதாரி
2) இந்துஸ்தானி இசையில் கமாஜ்தாட் எனஅழைக்கப்படுவது
3) பண் செந்துருத்தி
4) எல்லாம் கோமள ஸ்வரமாக அமைந்த இராகம். (12புள்ளிகள்)

III. முத்துஸ்வாமிதீட்சிதரின் வாழ்க்கைவரலாறு இசைப்பணி பற்றி பின்வரும் விடயங்களின் கீழ் விளக்குக

1) வாழ்ந்தகாலம்
2) பெற்றோர்
3) இசைப்பயிற்சி
4) பிரபல்யமான கிருதிகள் பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டு.
5) இயற்றியகொத்துக்கீர்த்தனைகள்
6) முத்திரை
7) ரஸம்
8) உருப்படிகளில் காணப்படும் சிறப்பம்சங்கள்
9) சீடர்கள் (12 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

IV.

1) இசைக்கச்சேரிகளில் பிரதானதாளவாத்தியமாக பயன்படுத்தப்படும் இசைக்கருவி எது? 1புள்ளி
2) இவ்வாத்தியத்தில் பிரபல்யமான இந்திய இசைக்கலைஞர்கள் இருவரைக் குறிப்பிடுக

1புள்ளி

3) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

6புள்ளிகள்

4) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கிச் சுருதிசேர்க்கும் முறையினையும் விளக்குக. 4 புள்ளிகள்

(12 புள்ளிகள்)

V.

1) 72 மேளகர்த்தா சக்கரத்தில் 9வது சக்கரத்தின் பெயர் யாது? 1புள்ளி
2) அச்சக்கரத்தின் நேர் சுத்தமத்திமச் சக்கரத்தின் பெயர் யாது? 1புள்ளி
3) குறிப்பிட்ட சுத்தமத்திமச் சக்கரத்தின் மேளஎண்கள், இராகங்கள், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றை ஒழுங்காக எழுதுக. 10 புள்ளிகள்.

(12 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

VI. "17ம் 18ம் நூற்றாண்டு கர்நாடக இசைவளர்ச்சியின் ஒரு பொற்காலம்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டை நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

VII. பின்வரும் உருப்படிகளை இனங்கண்டு ஏதாவது ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக. உதாரணங்கள், இயற்றியவர் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

1) நாயகி நாயக பாவமாக அமைந்த உருப்படி.
2) 5 அம்சங்களைக் கொண்ட உருப்படி.

(12 புள்ளிகள்)